# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 221/மா/2023**

**நாள்: 07.09.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம்-2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண். 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 28.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.07.2023–ல் பெறப்பட்டு 221/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

2. மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 28.07.2023 நாளிட்ட தனது மனுவில் :

R. மயில்சாமி, பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர், புது விளாங்குடி, மதுரை-18ல் வசிக்கும் நான் சமூக ஆர்வலர் மற்றும் RTI Act 2005 ஆர்வலரும் ஆவேன்.

மதுரை மாநகராட்சி மண்டலம்-2 (வடக்கு) வார்டு எண்கள்.1, 20 மற்றும் 21 பகுதிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட தெரு நாய்கள் சுற்றித் திரிகின்றன. இதில் பெரும்பாலன தெரு நாய்கள் ரேபிஸ் உள்ளிட்ட தொற்றுகளுக்கு ஆளாகி உள்ளன. இப்பகுதிகளில் வாழும் ஒவ்வொரு தெருவிலும் குழந்தைகள், மாணவ, மாணவிகள் பெண்கள் மற்றும் முதியவர்களை கடிப்பதுடன் இப்பகுதிகளில் வளர்க்கப்படும் ஆடு மாடுகளையும் கடித்து விடுகின்றன. மேலும் இரண்டு சக்கர வாகன ஓட்டிகளின் குறுக்கே சென்று விபத்துகளை ஏற்படுத்தி வருகிறது.

வீடுகளில் செல்லப்பிராணியாக நாயை வளர்த்து பின்னர் தெருக்களில் விட்டு விடுகின்றனர். இதனால் இந்த வார்டுகளில் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தெரு நாய்களுக்கு பயந்து பொது மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகிறார்கள். இது குறித்து புகாரினை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு 24/7/2023 தேதியில் பதிவு தபாலில் (RT A2A450521IN) புகார் மனு அனுப்பியுள்ளேன்.

எனவே The Animal Birth Control Rules, 2023, விதி 9 (A)-ன் படி தெரு நாய்களின் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்தியும், மேற்படி வார்டுகளான 1, 20, 21ல் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை செய்தும், வெறி நாய் தடுப்பூசி (ARV) போட்டும் பொது மக்கள் அச்சம் இல்லாமல் சென்று வர தகுந்த நடவடிக்கை எடுத்தும், இது நாள் வரையிலும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காத சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**2. இம்முறைமன்ற கடித நாள் 14.8.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் இம்மனு மீதான அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய 19.8.2023 நாளிட்ட அறிக்கையில்** :

இந்நேர்வு தொடர்பாக சுகாதார ஆய்வாளரின் குறிப்பில், மதுரை மாநகராட்சி, மண்டலம்-2, (வடக்கு) உட்பட்ட 21 வார்டுகளுக்கும் சேர்த்து, ஒரு நாய் பிடிக்கும் வாகனம் மற்றும் நான்கு நாய் பிடிக்கும் பணியாளர்கள் உள்ளனர். இந்த பணியாளர்கள் மற்றும் வாகனத்தை பயன்படுத்தி ஒவ்வொரு வார்டிலும் நாய் பிடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் வார்டு எண்.1 மற்றும் 20-ல் மாதம் ஒருமுறை நாய்கள் பிடிக்கப்பட்டு Animal Birth Control Rules-2023 விதி 9 (A)ன்படி, வெள்ளக்கல்லில் உள்ள மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள நாய்கள் கருத்தடை மையத்தில் கருத்தடை செய்யப்பட்டு ரேபிஸ் நோய் தடுப்பூசி போடப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி பிடித்த இடத்திலேயே மீண்டும் விடப்படுகிறது. அதனடிப்படையில் புகாரில் குறிப்பிட்டுள்ள வார்டுகளில் 28.07.2023 மற்றும் 19.08.2023 ஆகிய இரு தினங்கள் நாய்கள் பிடிக்கப்பட்டு, தெரு நாய்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட விபரத்தினை தெரிவித்து மனுதாருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.** மனுதாரர் 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண்கள் 1,20 மற்றும் 21ல் தெருநாய்கள் சுற்றித் திரிகிறது. அங்கு சுற்றித் திரியும் வெறிநாய்கள் பொதுமக்களையும், கால்நடைகளையும் கடித்துவிடுகிறது. இதனால் அப்பகுதிவாழ் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடி வருகின்றனர். எனவே Animal Birth Control Rules-படி தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் ARV தடுப்பூசி போடவும் மேலும் அங்குள்ள பொதுமக்கள் அச்சமில்லாமல் செல்லும் வகையில் மேற்கண்ட தெருநாய்களை கட்டுப்படுத்தவும் மாநகராட்சியால் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவண செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**4. மதுரை மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்**:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2ல் தெருவில் சுற்றித் திரியும் நாய்கள் மாதந்தோறும் பிடிக்கப்பட்டு அவைகளுக்கு வெள்ளக்கல்லில் உள்ள மாநகராட்சி

நாய்கள் கருத்தடை மையத்தில் கருத்தடை செய்யப்பட்டு, ரேபிஸ் நோய் தடுப்பூசியும் போடப்பட்டு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி அவை விடப்படுகின்றன என்பதையும், மேற்கண்ட பகுதியில் சுற்றித் திரியும் தெருநாய்களை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் - 2 (வடக்கு) வார்டு எண்.1, 20 (ம) 21ல் சுற்றித் திரியும் தெரு நாய்களால் பொது மக்களும், பள்ளி மாணவ/மாணவியர்களும் அச்சத்துடன் நடமாடுவதாகவும், இதனை The prevention of cruelty (capture of animals) Rule 1979-ன்படி நடவடிக்கை எடுக்க கோரி மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலகத்திற்கு புகார் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து, தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம்-2 (வடக்கு) உட்பட்ட 2 வார்டுகளும் சேர்த்து ஒரு நாய் பிடிக்கும் வாகனம் (ம) நான்கு பணியாளர்கள் கொண்டு ஒவ்வொரு மாதமும் நாய்கள் பிடிக்கப்பட்டு Animal Birth Control - 2023 விதி 9 (A)ன்படி வெள்ளக்கல்லில் உள்ள நாய்கள் கருத்தடை மையத்தில் கருத்தடை செய்யப்பட்டு, ரேபீஸ் நோய் தடுப்பூசி போடப்பட்டு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி பிடித்த இடத்திலேயே மீண்டும் விடப்படுகிறது என்றும் 28.7.2023 மற்றும் 19.8.2023 ஆகிய இரு தினங்களில் நாய்கள் பிடிக்கப்பட்டு தெரு நாய்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மதுரை மாநகராட்சி மண்டலம்- 2 (வடக்கு) உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், சுகாதார ஆய்வாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்து உள்ளனர்.

**<u>விலங்கு இன விருத்தி கட்டுப்பாடு விதிகள் 2023</u>**

"விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் 1960இன் கீழ், விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு விதிகள், 2023 மார்ச் 10, 2023 தேதியிட்ட அறிவிக்கையின் வாயிலாக மத்திய அரசு வெளியிட்டுள்ளது. விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு (நாய்கள்) விதிகள், 2001 ரத்து செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க இந்த விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தெரு நாய்களை வேறு இடங்களில் கொண்டு விடுவதை அனுமதிக்க முடியாது என்று பல்வேறு தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்த விதிகளின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் / நகராட்சிகள் / மாநகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகள் உள்ளிட்டவை, தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடுவதற்கான விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதுப்போன்ற பணிகளை மேற்கொள்ளும்போது விலங்குகளை வதை செய்யும் பிரச்சனையும் தீர்க்கப்பட வேண்டும். இந்த விதிகளை முறையாக அமல்படுத்தி, விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டத்தை உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தலாம். இதன் மூலம் விலங்குகள் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களில் கவனம் செலுத்தப்பட்டு, தெரு நாய்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும்.

விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு மற்றும் ரேபிஸ் நோய்த் தடுப்புத் திட்டங்களையும் மாநகராட்சிகள் செயல்படுத்த வேண்டும். தெரு நாய்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லாமல் நாய்களுக்கு ஏற்படும் பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்பதற்கு இந்த விதிகளில் வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடுத் திட்டத்திற்காக இந்திய விலங்குகள் நல வாரியத்தால் பிரத்தியேகமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். இது போன்ற நிறுவனங்களின் பட்டியல் வாரியத்தின் இணையதளத்தில் விரைவில் பதிவேற்றம் செய்யப்படும். இது சம்பந்தமான அறிவிப்பை மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறைகளுக்கு மத்திய அரசு ஏற்கனவே அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது."

எனவே மதுரை மாநகராட்சி மண்டலம்-2 (வடக்கு) உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையின் அடிப்படையிலும் மற்றும் சுகாதார ஆய்வாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறும், மத்திய அரசின் விதிகளையும், The Prevention of cruelty (capture of Animals) Rule, 1979 மற்றும் The Animal Birth Control Rules, 2023 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை பின்பற்றி மதுரை மாநகராட்சி, மண்டலம்-2ல் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் மதுரை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் சுற்றித் திரியும் தெரு நாய்களை மேலே குறிப்பிட்டுள்ள விதிகளின்படி இனபெருக்கத்தை கட்டுப்படுத்தவும் பொது மக்கள், மாணவ/மாணவியர்கள் அச்சமின்றி நடமாட வழிவகை செய்வதை உறுதிபடுத்துமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7- ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   மனை எண்.5. அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
   மதுரை – 625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   தல்லாகுளம், மதுரை.
3. உதவி ஆணையர்,
   மண்டலம்-2, (வடக்கு),
   மதுரை மாநகராட்சி, மதுரை.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்